11th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ)வும் (இ)யும் 1956 நவம்பர் பரீட்சையில் முதல் தொகுப்பு.

	ஆஜர் ஆனவர்கள்.	தேர்ச்சி அடைந்தவர்கள்.
நாதஸ்வரம்	9	2
தவுல்	4	..
1962 ஜூன் பரீட்சையில்		
இரண்டாம் தொகுப்பு—		
நாதஸ்வரம்	4	2
தவுல்	2	2

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியில் எத்தனை பேருக்கு இடமிருக்கிறது? பரம்பரையாகத் தொழில் செய்கிறவர்களுக்குத்தான் இடம் கொடுக்கப்படும் என்றும், மற்றவர்களுக்கு கொடுக்கப்பட மாட்டாது என்றும், சொல்கிறார்கள். என்னிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கிக்கொண்டு சென்ற ஒரு பையனுக்கு அங்கே இடமில்லை என்று சொல்லித் திருப்பி விட்டார்கள். ஆகையால் அங்கே எந்த அடிப்படையில் இடம் ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இதில் உள்ள நிலைமை என்ன வென்றால் அங்கே ஆள் வந்து சேரவில்லை என்ற பிரச்னைதான். அதனால் அதை மூடிவிடலாம் என்றும் தகவல் தந்தார்கள். முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், 'அது தமிழ்நாட்டின் புராதனக் கலை, அதில் என்ன நஷ்டம் வந்தாலும் அதைத் தொடரவேண்டும்' என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரிடத்தில் யாராவது வந்தால், என்னிடத்தில் அனுப்பிவைத்தால் நிச்சயமாக இடம் வாங்கிக் கொடுக்கப் படும்.

Education Department Employees' Association

*189. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Employees' Association of the Education Department of Tamil Nadu met at Madurai on 15—9—1968 and passed a resolution, resolving that they will resort to direct action, if their requests are not complied with; and

(b) if so, the action taken thereon?

கல்வித் துறை அலுவலகப் பணியாளர் சங்கம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு கல்வித் துறை அலுவலகப் பணியாளர் சங்கம் 1968 செப்டம்பர் 15-ஆம் தேதி கூடி தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் நேரடி நடவடிக்கையில் இறங்கப்

[11th March 1969

போவதாக மதுரையிலிருந்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதா ?

(இ) ஆமெனில், இதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இடைக்கால பதில்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

Teachers of Aided High Schools.

*190. Q.—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of cases of teachers in Aided High Schools in Thanjavur Town area, where the salary reduced on 1—4—1964, has not been restored to teachers as per their Service Register, as on 1—7—1967; and

(*b*) the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஐந்து.

(இ) இந்த ஐந்து தேர்வுகளில், நிர்வாகத்தாரால் 1-4-1966-க்கு முன்னால் அளிக்கப்பட்ட சம்பள உயர்வு ஒன்று முறையாக இல்லாத காரணத்தால் சம்பளத்தை முடிவு செய்கையில் அச்சம்பள உயர்வு மறுக்கப்பட்டது. எனினும், ஆசிரியர்களால் வாங்கப்பட்ட அதிகத் தொகை அடுத்துவரும் சம்பள உயர்வுகளில் சேர்க்கப்படவேண்டிய தனிப்பட்ட சம்பளமாக கருதப்பட்டது.

THIRU G. KRISHNAMURTHY : Sir, has the salary been reduced to the minimum in respect of Physical Training Instructors? As this particular teacher would not have been affected had not the free education scheme been implemented, what is the difficulty in considering this case, Sir?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஐந்துபேர் தான் அதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குச் சில காரணங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

THIRU G. KRISHNAMOORTHY : Is that the reason, Sir, that one teacher was entertained and permanent exemption was given by the Department every year? He was given increment so long ago as 31—3—1964, when the Government undertook direct payment of salaries to teachers?

THE HON. THIRU S. MADHAVAN : The hon. Member may straightaway give details about the five persons and in what way they are entitled to. Then I will consider them.

Engineering Graduates from Russian Universities.

*191 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of Engineering Graduates with doctorate degrees from Russian Universities working in (i) Government and (ii) Private Engineering Colleges in the State ; and